பத்திரிக்கைச் செய்தி

பணிஇடமாற்றத்தை ரத்து செய்துதர லஞ்சம் கேட்டு பெற்ற வழக்கில் உடற்கல்வி ஆசிரியருக்கு 3 ஆண்டுகள் சிறை

புகார்தாரர் திருமதி.புவனா, குடியாத்தம் அரசு மேல்நிலைப்பள்ளியல் ஆசியரியராக பணிபுரிந்து வந்துள்ளார். புகார்தாரருக்கு குடியாத்தம் அரசு மேல்நிலைப்பள்ளியிலிருந்து வேப்பணஹள்ளி. கிருஷ்ணகிரி மாவட்டத்திற்கு மாற்றம் செய்து ஆணை பிறப்பிக்கப்பட்டிருந்தது. மேற்படி ஆணையை ரத்து செய்து தருவதாக கூறி திரு.கலையரசன், உடற்கல்வி ஆசிரியர், ஆண்கள் மேல்நிலைப்பள்ளி, பள்ளகுப்பம், வேலூர் மாவட்டம் உறுதியளித்துள்ளார். மேலும் மேற்படி ஆணையை ரத்துசெய்ய தனக்கு ரூ.1,00,000/- லஞ்சமாக கொடுக்க வேண்டும் என கேட்டுள்ளார். லஞ்சம் கொடுக்க விரும்பாத புகார்தாரர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, வேலூர் பிரிவில் அளித்த புகாரின்பேரில் வழக்கு பதிவு செய்யப்பட்டு பொறிவைப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. மேற்படி பொறிவைப்பு நடவடிக்கை கடந்த 27.12.2013 அன்று புகார்தாரரிடமிருந்து திரு.கலையரசன், உடற்கல்வி ஆசிரியர் லஞ்சபணம் ரூ.1,00,000/- பெற்றபோது கைது செய்யப்பட்டார். இவ்வழக்கானது முதன்மை மற்றும் மாவட்ட நீதிமன்றம், வேலூர் மாவட்டத்தில் நடைபெற்று வந்தது. இவ்வழக்கில் இன்று 19.12.2025ந் தேதி திரு.கலையரசன், உடற்கல்வி ஆசிரியருக்கு 3 ஆண்டுகள் சிறை தண்டணையும் மற்றும் ரூ.10,000/- விதித்து தீர்ப்பளிக்கப்பட்டது.